1973 டிசம்பர் 3]

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன் : தமிழ்ப் புலவர்கள் இப்போது ஏராளமான பேர்கள் இருக்கிறார்கள். எந்தெந்த அளவிற்கு சில பல கல்லூரிகளில் கட்டுப்படுத்தலாம் என்று எண்ணிக்கொண்டிருக்கிற நேரத்தில் மாலை நேரக் கல்லூரி தனியாக வைக்கவேண்டிய அவசியம் ஏற்படாது.

திரு. வை. பாலசுந்தரம் : நம் தமிழ்நாட்டில் அதிகமான தமிழ்ப் புலவர்கள் எதையாவது எழுதவேண்டுமென்ற துடிப்பில் இருக்கிறார்கள். அவர்களை நம் அரசு எந்த வகையில் பயன்படுத்திக் கொள்ளும் ?

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன் : எதையாவது எழுதவேண்டுமென்று தோன்றுகிறவர்களை எப்படியாவது பயன் படுத்திக் கொள்ளவேண்டுமென்பது சரிப்பட்டு வராது. தமிழ் படிக்கவேண்டும், தமிழ் ஆர்வத்தோடு தமிழ் மொழி அறிவு பெற வேண்டும் என்றளவில் தமிழில் புலமை பெறுவதில் யாரும் தடையாக நிற்கமுடியாது. அவர்கள் எல்லாம் ஆசிரியர் தொழில் தான் வேண்டுமென்று வரும்போதுதான் அப்படி விண்ணப்பிப் பவர்களின் எண்ணிக்கை அதிகமாகிறது. அதில் குறிப்பிட்டார்களைத் தேர்ந்தெடுத்து அவர்களுக்கு பயிற்சி கொடுக்கவேண்டிய அவசியம் ஏற்படுகிறது.

Institute of Catering Technology

* 573 Q.—THIRU N. DENNIS : Will the Hon. the Minister for Education and Tourism be pleased to state—

(*a*) whether the Catering Institute at Madras has been receiving candidates from Star Tourist Hotels for training; and

(*b*) if so, the details thereof ?

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன் : (அ) ஆம்.

(இ) இந்நிறுவனம் நட்சத்திரப்பயணிகள் விடுதிகளில் இருந்து வரும் தொழில் பழகும் பயிற்சிச் சட்டம் 1961-ன் கீழ் சிற்றுண்டி விடுதி, செயலிட மேடை மற்றும் உணவு சமைத்தல் கலை, ஆகியவற்றின் ஆறு திங்களுக்கு தொழில் பழகு பயிற்சி அளிக்கின்றது. இத்துடன் விடுதிகளில் வரவேற்றல், மற்றும்

கணக்குவைப்புக் கலையிலும், 1973 மார்ச் திங்களிலிருந்து, புதிதாகச் சேர்த்துக் கொள்ளப்படும் பயிற்சியாளர்களுக்கு, பயிற்சிகள் அளிக்கப்படும்.

திரு. என். டென்னிஸ் : எவ்வளவு காலம் பயிற்சி கொடுக்கப் படுகிறது. எவ்வளவு பீஸ் வசூலிக்கப்படுகிறது. வெஜிடேரியன், நான்-வெஜிடேரியன் ஆகியவைகளில் பயிற்சி அளிக்கப்படுகிறதா ?

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன் : தலைவர் அவர்களே, இந்த சமையல் கலை கல்வி நிறுவனத்தில் 6 மாத காலம் பயிற்சி அளிக்கப்படுகிறது. அதற்குப் பிறகு 2½ ஆண்டிலிருந்து 3 ஆண்டுகள் வரையில் ஏதேனும் ஒரு ஸ்டார் ஹோட்டலில் அவர்கள் பணியாற்ற வேண்டும். அப்படி பணியாற்றியதற்குப் பிறகு ஒரு பரீட்சையும் அவர்கள் எழுதவேண்டும். இரண்டு, மூன்று ஆண்டு காலத்திற்கு அவர்களுக்கு ஸ்டைபெண்டு தரப்படுகிறது. முதல் ஆண்டு காலத்தில் முதல் 6 மாத காலத்திற்கு, ரூ. 60, இரண்டாவது 6 மாத காலத்திற்கு ரூ. 70, இரண்டாவது ஆண்டு காலத்தில் ரூ. 80, மூன்றாவது ஆண்டு காலத்தில் ரூ. 90 ஸ்டைபெண்டு தரப்படுகிறது.

திரு. எம். சுரேந்திரன் : நட்சத்திர முத்திரை பெற்ற பயணிகள் விடுதிகளில் நட்சத்திரங்களும், நிலவும், தென்றலும் அதிலே உலாவுகிறவர்களுக்குக் கிடைக்கின்றது என்று சொல்லப்படுகிறதே, இவைகளெல்லாம் உண்மையா ?

மாண்புமிகு பேரவைத் தலைவர் : (மணி அடிக்கப்பட்டது). நான் இந்தக் கேள்வியை அனுமதிக்கவில்லை.

திரு. ஜே. ஜேம்ஸ் : ஹோட்டல் தொழிற் பயிற்சி பெற்றவர் களுக்கு வேலை வாய்ப்பு அளிப்பதற்கு அரசாங்கம் ஏதாவது திட்டங்கள் வைத்திருக்கிறதா ?

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன் : இப்பொழுது புதியதாக தோன்றுகிற புதிய ஹோட்டல்களுக்கு ஆட்கள் தேவைப் படுகிறது. இப்பொழுது அவர்களுக்கு வேலை வாய்ப்பு இல்லாமல் இல்லை. நமது கேட்டரிங் இன்ஸ்டிட்யூட்டில் பயிற்சி பெற்றவர்கள் இந்தியாவிலுள்ள பல்வேறு இடங்களில் வேலைக்கு அமர்த்தப் பட்டிருக்கிறார்கள். இப்பொழுது அதிலே பயிற்சி பெற்றவர்களுக்கு

வேலை நெருக்கடி ஏற்படவில்லை. இன்னும் சில காலம் கழித்துத் தான் ஏற்பட்டால் ஏற்படலாம். இப்பொழுது அந்த நெருக்கடி வரவில்லை.

Pond Scheme in Kamakkavur

*574 Q.—Thiru P. SOUNDARAPANDIAN : Will the Hon. the Minister for Public Works be pleased to state the present stage of the scheme for the formation of a tank in Kamakkavur in Karur taluk ?

மாண்புமிகு திரு. ப. உ. சண்முகம் : இத்திட்டத்திற்கான ரூ. 37,500-க்கான மதிப்பீடு உள்ளூர் அதிகாரிகளின் பரிசீலனையில் உள்ளது.

திரு. பெ. சௌந்தரபாண்டியன் : இந்தக் குட்டைத் திட்டத்தைப் பரிசீலனை செய்வதற்கு நீண்ட நாட்கள் இழுக்க வேண்டிய சூழ்நிலை இருக்கிறது. ஆகவே, இதுபோன்ற சிறிய திட்டங்களை விரைவிலே முடித்துக் கொடுக்கும் அளவிற்கு அரசாங்கம் நடவடிக்கை எடுக்குமா ?

மாண்புமிகு திரு. ப. உ. சண்முகம் : மாவட்ட ஆட்சித் தலைவர் ஒப்புதல் கிடைக்கவில்லை. வந்ததற்குப் பிறகு தான் இதுபற்றி வேலை துவங்கும்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : திரு. பி. வெங்கடசாமி. கேள்வி கரூர் வட்டம் காமக்கவூர் குட்டை பற்றியது.

Thiru B. VENKATASWAMY : Sir, generally ponds constructed under the Soil Conservation Scheme have been handed over to Panchayats. So, may I know from the Hon. Minister whether the maintenance grant will be allotted to them so that they can maintain these ponds whenever they are completed ?

மாண்புமிகு திரு. ப. உ. சண்முகம் : தனிக் கேள்வி வேண்டும்.

Dam across river Kuduthalai

* 575 Q.—Thiru A. PARANDHAMAN : Will the Hon. the Minister for Public Works be pleased to state—

(*a*) whether there is any proposal under the consideration of the Government to construct a bed-dam across the river Kuduthalai at Manavur in Tirutani taluk and direct the surplus water into Manavur tank; and

(*b*) if so, the details thereof?